

திருச்சியில் மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாளை முன்னிட்டு நடைபெற்ற மௌன அஞ்சலி ஊர்வலத்தில் பங்கேற்றபின் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி முன்னிலையில் தி.மு.க.வினர் தியாகி சின்னச்சாமியின் கல்லறையில் மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள். இந்நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் தியாகராஜன், ஸ்டாலின் குமார், பழனியாண்டி கதிரவன், இனிகோ இருதயராஜ், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், கிழக்கு மாநகரச் செயலாளர் மதிவாணன், டோல்கேட் சுப்பிரமணி, சேர்மன் துரை ராஜ், மாத்தூர் கருப்பையா, வண்டி சேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மரியாதை செய்தனர்.

## ரூ 7 கோடி மதிப்புள்ள நிலத்தை - அரசுப் பள்ளிக்கு வழங்கிய

# மதுரை ஆயி அம்மாளின் கொடை உள்ளத்துக்கு - முதல்வரின் விருது!

## ‘தினத்தந்தி’ தலையங்கத்தில் பாராட்டு!



தலையங்கம்
தினத்தந்தி
25.1.2024 (வியாழக்கிழமை)
தகுதியானவருக்கு தகுதியான நாளில் வழங்கும் விருது!

சென்னை, ஜன. 27-

ரூ.7 கோடி மதிப்புள்ள தனது நிலத்தை தான் படித்த அரசுப் பள்ளிக்கு அளித்த மதுரை ஆயி அம்மாளின் கொடை உள்ளத்துக்கு தகுதியான விருது, தகுதியான விழாவில், தகுதியான முதல்வரால் வழங்கப்படுகிறது என தினத்தந்தி நாளிதழ் 25.1.2024 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:

முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் சமீபத்தில் தனது ‘எக்ஸ்’ சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவில், “கல்வி தான் உண்மையான அழிவற்ற செல்வம். ஒரு தலைமுறையில் பெறும் கல்வி ஏழேழு தலைமுறைக்கும் அரணாக அமையும் என்பதை உணர்ந்து, தனது ஒரு ஏக்கர் 52 செண்ட் நிலத்தை அரசு பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுவதற்காக கொடையாக அளித்துள்ளார்,

மதுரை யா.கொடிக்குளத்தை சேர்ந்த ஆயி அம்மாள் என்கிற பூரணம் அம்மாள். ஆயி அம்மாளின் கொடையால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெறுவார்கள். கல்வியையும், கற்பித்தலையும் உயர்ந்த அறமாக மதிக்கும் தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாக விளங்கும் அவரின் கொடை உள்ளத்தைப்போற்றி பெருமைப்படுத்தும் வகையில், நாளை குடியரசு நாள் விழாவில், அரசின் சார்பில் அவருக்கு முதல் அமைச்சரின் சிறப்பு விருது வழங்கப்படும்” என்று அறிவித்திருந்தார்.

இதைப்படித்தவுடன் எல்லோருக்கும், ‘யார் இந்த பூரணம் அம்மாள்?’ என்ற ஆவல் ஏற்பட்டது. ஏழைகளுக்கு ஒரு வேளை சாப்பாடு போட்டாலே அதை விளம்பரப்படுத்தி புகழ் தேடும் சமுதாயத்தில், இவ்வளவு பெரிய நன்கொடையை சத்தமில்லாமல் பூரணம் அம்மாள் வழங்கியுள்ளார். அவருடைய வயது 52. தனது 8 வயதில், முதலில் தந்தையையும், அடுத்து தாயையும் இழந்த அவர், தொடக்கக் கல்வியை யா.கொடிக்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தான் படித்தார். 18 வயதிலேயே திருமணமான அவர், 2 ஆண்டுகளில் கணவரையும் ஒரு விபத்தில் பறிகொடுத்தார். ஒரே மகள் ஜனனியை ஆசை ஆசையாக வளர்த்தார். கணவர் பணியாற்றிய வங்கியில் அவருக்கு கருணை அடிப்படையில் வேலை கிடைத்து, இப்போதும் அந்த வங்கியில் எழுத்தராக பணியை தொடர்கிறார். மகள் ஜனனியை மணமுடித்து கொடுத்த பின், அவரும் மறையவே பூரணம் அம்மாளுக்கு உலகமே இருண்டுபோனது.

அடுத்தடுத்து, குடும்பத்தில் உயிரிழப்புகளை சந்தித்த அவருக்கு, கொடை உள்ளம் மட்டும் மங்கிப்போகவில்லை. தனது தந்தை திருமணச் சீராகக் கொடுத்த ஒரு ஏக்கர் 52 செண்ட் நிலத்தின் சந்தை மதிப்பு இப்போது ரூ.7 கோடி என்பதை சற்றும் பொருட்படுத்தாமல், தமிழ்நாடு அரசின் ‘நம்ம ஊரு நம்ம பள்ளி’ திட்டத்தின் கீழ், தான் படித்த யா. கொடிக்குளம் பள்ளிக்கூடத்துக்கு தானப்பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டு, சத்தமில்லாமல் வங்கிக்கு வந்து வழக்கமான பணியைப் பார்க்கத் தொடங்கிவிட்டார்.

இதைக் கேள்விப்பட்ட மதுரை எம்.பி. சு.வெங்கடேசன், பூரணம் அம்மாள் பணியாற்றிக் கொண்டிருந்த வங்கிக்கு சென்று பாராட்டிய பிறகு தான் வெளியே தெரிந்தது.

கல்விக்காக தானம் செய்வதில் மற்றவருக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பூரணம் அம்மாள், 20 ஆண்டுகளுக்கு முன்பே சிறுநீரக பாதிப்பால் அவதிப்பட்ட தன் சகோதரருக்கு தன்னுடைய ஒரு சிறுநீர கத்தையும் தானமாக வழங்கி, உடல் உறுப்பு தானத்திலும் முன்னோடியாக விளங்குகிறார்.

ஏற்கனவே, தான் படித்த அதே பள்ளிக்கு கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.9 லட்சம் செலவில் கழிப்பறைகுடிநீர் வசதி, மாணவர்களுக்கு நோட்டுஎழுதுபொருட்கள் வாங்கிக் கொடுத்துள்ளார். அவரது இந்த கொடை உள்ளத்துக்கு தகுதியான ஒரு விருது, தகுதியான விழாவில், தகுதியான ஒரு முதல்அமைச்ச ரால் வழங்கப்படுவது சாலப்பொருத்தமுடையதாகும்.

‘இந்த நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளியாக வேண்டும், அதற்கு உயிருடன் இருக்கும்போதே நம்முடைய நிலத்தை கொடுக்க வேண்டும்’ என்று சொன்ன மகள் ஜனனியின் பெயரை சூட்டவேண்டும் என்ற பூரணம் அம்மாளின் ஆசையும், கல்வித்துறையால் பரிசீலித்து நிறைவேற்றப் படவேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



நாட்டின் 75வது குடியரசு தின விழாவை முன்னிட்டு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் கோயம்பேட்டில் உள்ள (TNHB) வீட்டு வசதி வாரிய தலைமை அலுவலகத்தில் தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார். உடன் வீட்டு வசதி துறை மேலாண்மை இயக்குநர் சரவணவேல்ராஜ், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் சரவணமூர்த்தி, வாரிய தலைமை பொறியாளர்கள் கண்ணன், சரவணன், வாரிய தலைமை வருவாய் அலுவலர் புண்ணியக்கோடி, மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி. ஃபர்கத் பேகம், அன்பழகன் ( நில எடுப்பு) அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவண்ணாமலை த. பொன்முடி
### சனவரி 27 (2008)



திருவண்ணாமலை மாவட்டக் கழகச் செயலாளர், தண்டராம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட மையக் கூட்டுறவு வங்கித் தலைவர், தண்டராம்பட்டு ஒன்றியக் கழகச் செயலாளர், கிளைக் கழகச் செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



புதுச்சேரி மாநில தி.மு.க. மாணவர் அணி மற்றும் நெல்லித்தோப்பு, காமராஜர் நகர் தொகுதிகள் சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கான ரவணக்க நாள் பொதுக்கூட்டம் சாரம் அவ்வைத் திடலில் நேற்று மாலை நடந்தது. திமுக தேர்தல் பணிக்குழு தலைவரும், தமிழ்நாடு உயர்கல்வித் துறை அமைச்சருமான ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளருமான இரா. சிவா மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் இலயோலா த. ராஜசேகர் ஆகியோர் மொழிப்போர் தியாகிகளுக்கு பொற்கிழி வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கவுரவித்தார்கள்.

# புதுச்சேரி மாநிலத்தில் ‘திராவிட மாடல்’ அரசு அமைவது நிச்சயம்!

## வீரவணக்க நாள் கூட்டத்தில் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் பேச்சு!

புதுச்சேரி, ஜன. 27 -

புதுச்சேரி மாநில தி.மு.க. மாணவர் அணி மற்றும் நெல்லித்தோப்பு, காமராஜர் நகர் தொகுதிகள் சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் சாரம் அவ்வைத் திடலில் நேற்று முன்தினம் மாலை நடந்தது.

மாநில மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எஸ்.பி. மணிமாறன் தலைமை வகித்தார். முன்னாள் அவைத்தலைவர் வழக்கறிஞர் பலராமன், திமுக பொதுக்குழு உறுப்பினர் வே. கார்த்திகேயன், தொகுதி செயலாளர்கள் செ. நடராஜன், ர. சிவக்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் பெ. வெலவன், ஆர். கோகுல், முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா. ஜெயப்பிரகாஷ் என்கிற ஜேபி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஸ்டீபன்ராஜ், ஸ்ரீஹரி, அமுதன், கீர்த்தி எழினி, தமிழ்மகள் ஜான்சிராணி, முத்தரசன் ஆகியோர் வரவேற்று பேசினார்கள்.

தி.மு.க. தேர்தல் பணிக்குழு தலைவரும், தமிழக உயர்கல்வித் துறை அமைச்சருமான ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளருமான இரா. சிவா மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் இலயோலா த. ராஜசேகர் ஆகியோர் மொழிப்போர் தியாகிகளுக்கு பொற்கிழி வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கவுரவித்தார்கள்.

கூட்டத்தில் தமிழக அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் பேசியதாவது:-

ஒன்றிய அரசின் உதவியை எதிர்பார்க்காமலேயே தமிழ்நாட்டில் எண்ணற்ற திட்டங்களை திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது. திராவிட ஆட்சியை அசைத்துவிடலாம் என்ற ஒன்றிய பாஜக அரசின் எண்ணம் ஒருபோதும் பலிக்காது. திராவிட இயக்கம் இருந்தால் தான், வளர்க்கப்பட்டால் தான் தமிழ்நாடு தமிழ்நாடாகவும், புதுச்சேரி புதுச்சேரியாகவும் இருக்கும். தமிழகத்தை ஒட்டியுள்ள புதுச்சேரியிலும் திராவிட இயக்கத்தின் ஆட்சி இருந்தால் நன்றாகத்தான் இருக்கும். இதுபற்றி திமுக தலைமை முடிவு செய்யும். திமுக தலைவரை பற்றி பேச அண்ணாமலைக்கு என்ன தகுதி இருக்கிறது?. ராமரை வைத்து அரசியல் செய்யக் கூடாது. ராமர் கோயில் திறப்பு விழாவுக்கு ஏன் குடியரசுத் தலைவரை அழைக்கவில்லை?. இது போன்று கேள்விகளை திமுக முன்வைத்தால் அமலாக்கத்துறை, வருமான வரித்துறைகளை வைத்து மிரட்டுவது. எந்த உருட்டல், மிரட்டலுக்கெல்லாம் நாங்கள் பயப்படவும் மாட்டோம், அடிபணியவும் மாட்டோம். தமிழ்நாட்டில் ஒருகாலமும் பா.ஜ.க. மலராது. புதுச்சேரியில் திராவிட மாடல் அரசு அமைய தி.மு.க. அமைப்பாளர் சிவா கடுமையாக பாடுபடுகிறார். இதுகுறித்து கழகத் தலைவரிடம் எடுத்துச் சொல்லி, எதிர்வரும் தேர்தலில் திமுக வெற்றி பெற்று புதுச்சேரியில் மீண்டும் திராவிட மாடல் அரசு அமையும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் மாநில அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் வி. அனிபால் கென்னடி, எல். சம்பத், மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம் என்கிற சரவணன், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக் குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், வெ. ராமசாமி, ப. செல்வநாதன், அ. சோமசுந்தரம், பா. செ. சக்திவேல், ந. தங்கவேலு, பெ. வேலவன், வீ. சண்முகம், எஸ். தர்மராஜன், ஆர். கோகுல், ஆர். ரவீந்திரன், டி. செந்தில்வேலன், டாக்டர் கா. மாயக்கிருஷ்ணன், ப. இளம்பரிதி, பெ. பழநி, மு. பிரபாகரன், வே. மாறன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் எம்.ஆர். திரா விட மணி, இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல்.மணிகண்டன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவக்குமார், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ. மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ. சக்திவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், கலிய. கார்த்திகேயன், சே. ராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், ச. அசோக் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், தொகுதி கழக நிர்வாகிகள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக பங்கேற்றனர்.

கூட்ட நிறைவில், மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் ந. கண்ணன் நன்றி கூறினார்.

## இராமர் கோவில் திறப்பு விழாவினைக் கண்டிக்கும் வகையில் பதாகைகள்!

# புனே திரைப்படக் கல்லூரி மாணவர்கள் மீது தாக்குதல்!

## காவிக் கும்பல் வன்முறை வெறியாட்டம்!

மும்பை, ஜன. 27 -

அயோத்தியில் பாபர் மசூதியை இடித்துவிட்டு அதே இடத்தில் ராமன் கோயில் கட்டப்பட்டு அதன் திறப்புவிழா நடைபெற்றது. அதனைக் கண்டிக்கும் வகையில் புனே திரைப்படக் கல்லூரி மாணவர்கள் தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்யும் வகையில் ‘பாப்ரியை நினைவு கொள்வோம், அரசமைப்புச் சட்டம் கொல்லப்பட்டது’ என்று பதாகைகளை வைத்துள்ளனர்.

அங்கு புகுந்த காவிக்கும்பல் ‘ஜெய்சிறீராம்’ என்று முழக்க மிட்டபடி, பதாகைகளைத் தீவைத்து எரித்தும், மாணவர்களைத் தாக்கியும் வன்முறை வெறியாட்டம் போட்டுள்ளது. தாக்கப்பட்ட மாணவர்களில் 4பேர் படுகாயமடைந்தனர்.

தாக்குதலை தடுத்து நிறுத்தவோ, வன்முறை வெறியாட்டம் போட்ட காவிக்கும்பலை அப்புறப்படுத்தவோ பாதுகாப்புக்கான காவலர் எவரும் முனைப்புக் காட்டவில்லை என்று மாணவர்கள் குற்றம் சுமத்தி யுள்ளனர்.

கல்வி நிறுவனத்துக்குள் சுமார் 20 முதல் 25 பேர் கொண்ட கும்பல் பட்டப் பகலில் பிற்பகல் 1.30 மணியளவில் நுழைந்து வன்முறை வெறியாட்டம் போட்டுள்ளனர். மாணவர் சங்கத் தலைவர் மான்காப் நோக்வோகம் நுழைவாயிலை நோக்கிச் சென்றபோது, “ஜெய்சிறீராம்” என்று கத்திக்கொண்டே நுழைந்த காவிக்கும்பல் மாணவர் சங்கத் தலைவரைத் தாக்கியபோதும் பாதுகாப்புக்கான காவலர்கள் அமைதியாக இருந்துள்ளனர்.

காவிக் கும்பலின் வன்முறை குறித்து பாதுகாப்புக்கான காவலர்களிடம் கேள்வி எழுப்பிய மாணவர் சங்க பொதுச்செயலாளர் சயந்தனும் அக்கும்பலால் கடுமையாகத் தாக்கப்பட்டார். இந்தத் தாக்குதல் 23.1.2024 அன்று அரங்கேற்றப்பட்டுள்ளது. இதேபோல் கடந்த 21.1.2024 அன்றும் கல்வி நிறுவனத்துக்கு வெளியே கூடிய கும்பல் மேலும் அதிகமானவர்களுடன் வருவதாக எச்சரித்துச் சென்றது என்கின்றனர் மாணவர்கள். அந்த எச்சரிக்கை குறித்து கல்வி நிறுவனத்துக்கான காவல் அதிகாரி சஞ்சய் ஜாதவ் மற்றும் பதிவாளர் பிரதீக் ஜெயின் ஆகியோரிடம் முறை யிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மாணவர்கள் தரப்பில் கூறும்போது, “அப்பாவி மாணவர்கள் மீது குண்டர்கள் தாக்குதலை நடத்திய போது, கல்வி நிறுவனத்தில் பணியிலிருந்த பாதுகாப்புக்கான காவலர்கள் மற்றும் பணியாளர்கள் வெறுமனே பார்வையாளர்களாகவே இருந்தனர். வன்முறைகளால் மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டது. மாணவர்களின் அடிப்படை உரிமையான வாழ்வுரிமையுடன் ஜனநாயக உரிமைகளும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதை மாணவர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.” என்றனர்.

இந்தக் கல்வி நிறுவனத்துக்குத் தலைவராக ஒன்றிய பா.ஜ.க. அரசால் நியமிக்கப்பட்டுள்ளவர் திரைக்கலைஞர் மாதவன். இதுவரை அவர் இந்த வன்முறைகுறித்து மூச்சு விடவில்லை.

அயோத்தியில் ராமன் கோயில் விழா நடத்தப்பட்ட அடுத்த நாளிலேயே இவ்வளவு வன்முறைகளும் காவிக்கும்பலால் அரங்கேற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் திருப்பத்தூர் ஹவுஸிங் போர்டு மகாத்மா காந்தி சிலை அருகில் நடைபெற்ற ‘மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமைக் கழகப் பேச்சாளர் பேராசிரியர் முனைவர் சபாபதிமோகன், தலைமைக் கழக பேச்சாளர் உடுமலை தண்டபாணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்கள். மாவட்ட ஆவின் தலைவர் எஸ்.ராஜேந்திரன் தலைமையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தே.பிரபாகரன் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ., ஆ.சம்பத்குமார், கே.பி.ஆர்.ஜோதிராஜன், கு.ராஜமாணிக்கம், ம.அன்பழகன், க.உமாகன்ரங்கம், கே.சதிஷ்குமார், கவிதாதண்டபாணி, கே.ஏ.குணசேகரன், கே.முருகேசன், கே.ஆர்.திருப்பதி, எஸ்.தாமோதிரன், அ.மோகன்ராஜ், டி.ரகுநாத், சத்தியநாராயணன், சங்கிதாவெங்கடேசன், வீ.வடிவேல், ஆர்.தசரதன், மு.க.அருள்நிதி, மேகநாதன், ஆர்.சுதா, டி.சி.கார்த்திக், எஸ்,ஹரிஷ், ஏ.ஆர்.சபியுல்லா மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.